முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.17.03.2026

O.S No. 340/2012

பி.வா.சா.2-எபி விக்டர்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

என் அப்பா இந்த அசல் வழக்கில் 2ம் பிரதி ஆவார். 1ம் பிரதி எனக்கு பெரியப்பா ஆவார். 4,5 பிரதிகள் என் மாமிகள் ஆவார்.இந்த வழக்கின்2 முதல் 4 வாதிகள் என் மாமியின் பிள்ளைகள். இந்த வழக்கு பட்டிகை சொத்துக்கள் எனது பாட்டிக்கும் தாத்தாவிற்கும் உரிய சொத்துக்கள் என்றால் சரி. என் தாத்தா பாட்டிக்கு மொத்தம் 6 பிள்ளைகள். என் தாத்தா 1998 ல் இறந்தார். என் பாட்டி 1996 ல் இறந்தார். என் தாத்தாவும் பாட்டியும் வழக்கு 1 முதல் 5 பட்டிகை சொத்துக்களுக்கு எந்த வித ஆவணமும்எழுதி வைக்கவில்லை என்றால் சரி. அவர்கள் இருவரும் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றினார்கள் என்றாலும்அவர்கள் இறுதிசடங்கு கிறிஸ்தவ முறைப்படி நடந்தது என்றாலும் சரி. வாதிகளும் 1 முதல் 5 பிரதிகளும் , 6 முதல் 9 பிரதிகளும் என் தாத்தா பாட்டியின் வாரிசுகள் ஆவர்.

என் தாத்தா பாட்டி சொத்தில் எல்லா பிள்ளைகளுக்கும் 1/6 ன் வீதம் உரிமை உள்ளது என்றால் சரி. என் அப்பா மற்றும் பெரியப்பா வா.சா.ஆ.6 பாகபத்திரம் 2008 ல் ஏற்பாடு செய்து எழுதியுள்ளார்கள் என்றால் சரி. அந்த பாகபத்திரத்தில் என் மாமிகளின் கையொப்பமோ இல்லை என்றாலும் அவர்கள் சாட்சியாகவோ தரப்பினர்களாகவோ சேர்க்கவில்லை என்றாலும சரிதான் அவர்களுக்கு தெரியும். என் மாமிகள் என் அப்பாவிற்கோ பெரியப்பாவிற்கோ விடுதலை ஆவணம் அல்லது உரிமை மாற்று ஆவணம் ஏதாவது எழுதி கொடுத்தார்களா என்றால் இல்லை 20 ரூபாய் முத்திரைதாளில் எழுதி கொடுத்துள்ளார்கள்.

20 ரூபாய் முத்திரைதாளில் எழுதிகொடுத்த விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்திலும் எதிருரையிலும் சொல்லவில்லை என்றால் சரி. எனது சாட்சியத்தில் 20 ரூ முத்திரைதாள் ஆவணத்தை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரி. பாறசாலையில் உள்ள

6 வது ஐட்ட சொத்து குடும்ப சொத்து இல்லை என்றாலும் அதில் என் அப்பாவிற்கோ என் பெரியப்பாவிற்கோ என் தாத்தாவிற்கோ உரிமை இல்லை என்றால் சரி. அந்த சொத்து கேரளா மாநிலத்தில் உள்ளது. என் அப்பா பெயரில் எழுதப்பட்ட வா.சா.ஆ.7 தானபத்திர ஆவணத்தை என் அப்பா தயார் செய்தார் என்றால் சரியல்ல தாத்தா தயார் செய்து என் அப்பாவை அழைத்து சென்று பதிவு செய்தார். தெங்கம்புதூரில் உள்ள 2 சொத்துக்களை பாறசாலை பத்திர அலுவலகத்தில் எழுதினார்கள் என்றால் சரி. கேரள மாநிலத்தில் சொத்துக்கள் இல்லை என்ற விவரம் என் அப்பாவிற்கு தெரியும். என் அப்பாவிற்கு தெரிந்து தான் கேரளாவில் பாறசாலையில் பதிவு செய்தார்கள் என்றால் சரி.

ஐட்டம் 1 முதல்5 வரையுள்ள சொத்துக்கள் என் தாத்தா பாட்டி உயிருடன் இருக்கும்போது ஆவணம் எழுதாததால் பாகபிரிவினை பரிகாரம் இந்த வழக்கில் கேட்கபட்டுள்ளது என்றால் சரி. இதை தவிர வேறு சொத்துக்கள் என் தாத்தா பாட்டிக்கு உள்ளதா என்றால் உண்டு அந்த பாறசாலையில் பதிவு செய்த வா.சா.ஆ.7 ல் உள்ள 2 சொத்துக்கள் உள்ளது. என் தாத்தா பாட்டிக்கு வேறு சொத்துக்கள் உண்டு என்றும் அதை நான் சேர்க்கவில்லை என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1ம் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிகள் ஆகியோருக்கு தெரியாமல் என் அப்பா பெரியப்பா எழுதி கொண்ட வா.சா.ஆ 6 ஆவணம் செல்லாது மற்றும் அவர்களை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல அவர்களுக்கு தெரிந்தே எழுதபட்ட ஆவணம் ஆகும். வாதிகள் கேட்ட பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கதக்கது என்றாலும் வா.சா,ஆ.7 ல் சொல்லப்பட்டுள்ள 1,2 ஐட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு 1/6 பாகம் கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல.